பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
05 08 2024 **MONDAY** 7 15 **AM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மூன்று நாடுகள் அரசுமுறைப் பயணமாக, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு **Fiji** புறப்பட்டுச் சென்றார்.

2. எரிசக்தி உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடைவது அவசியம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. பங்களாதேஷில் வன்முறை நீடிப்பதால், அந்நாட்டிற்கு பயணம் செய்வதை இந்தியர்கள் தவிர்க்க வேண்டும் என்று வெளியுறவு அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

4. காஸாவில் பள்ளி ஒன்றின் மீது இஸ்ரேல் விமானப்படை நடத்திய தாக்குதலில் 25 பேர் உயிரிழந்தனர்.

5. பாரிஸ் ஒலிம்பிக் மகளிர் மல்யுத்தப் போட்டியின் 68 கிலோ எடைப்பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் **Nisha Dahia** பங்கேற்கிறார்.

>>>>>><<<<<<

மூன்று நாடுகள் அரசுமுறைப் பயணமாக, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு **Fiji** புறப்பட்டுச் சென்றார்.

**Fiji** அதிபர் திரு. **Ratu Wiliami** அழைப்பின் பேரில் அந்நாட்டிற்கு பயணம் மேற்கொள்ளும் அவர், அந்நாட்டு தலைவர்களுடன் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

இதனை தொடர்ந்து அந்நாட்டு நாடாளுமன்றத்திலும் குடியரசுத்தலைவர் உரையாற்றுகிறார்.

**Fiji**-யில் வாழும் இந்திய வம்சாவளியினர் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்கிறார்.

நாளை மறுநாள் நியூஸிலாந்து செல்லும் அவர், வரும் 9ஆம் தேதிவரை அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.

நியூஸிலாந்து அதிபர் திருமதி. **Cindy Kairo** மற்றும் பிரதமர் திரு. **Christopher Luxon**-ஐ சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

கல்வி மாநாடு ஒன்றில் பங்கேற்கும் குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, இந்திய சமூகத்தினருடன் கலந்துரையாடவுள்ளார்.

பின்னர் **Timor Leste** நாட்டிற்கு செல்லும் திருமதி. திரௌபதி முர்மு, அந்நாட்டு தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்துகிறார்.

**>>>>>><<<<<<**

நாட்டில் எரிவாயு உற்பத்தி, சாதனை அளவை எட்டியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

வளர்ந்த நாடு என்ற இலக்கை எட்ட இந்த சாதனை உதவும் என்றும், எரிசக்தி உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு அடைவது அவசியம் என்றும் அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ள பிரதமர், பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும் என்ற அரசின் உறுதிப்பாட்டை இந்த சாதனை எடுத்துக் காட்டுவதாக கூறியுள்ளார்.

முன்னதாக, மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி வெளியிட்ட சமூகவலைதளப் பதிவில், 2020-21ஆம் நிதியாண்டில் 28 புள்ளி ஏழு பில்லியன் கனமீட்டராக இருந்த எரிவாயு உற்பத்தி, கடந்த நிதியாண்டில் 36 புள்ளி நான்கு மூன்று பில்லியன் கனமீட்டராக அதிகரித்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

2026ஆம் ஆண்டு எரிவாயு உற்பத்தி 45 புள்ளி மூன்று பில்லியன் கனமீட்டராக அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

இரண்டு நாள் விடுமுறைக்குப் பின்னர் நாடாளுமன்றம் இன்று மீண்டும் கூடுகிறது.

மக்களவையில் சுகாதாரத்துறை மானிய கோரிக்கைகள் மீதான விவாதம் இன்றும் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

சில மசோதாக்களும் இன்று மக்களவையில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

மாநிலங்களவையில் எண்ணெய் வயல்கள் கட்டுப்பாட்டு மற்றும் மேம்பாட்டு திருத்தச் சட்டம் இன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

வேளாண் துறை மானிய கோரிக்கை குறித்த விவாதமும் இன்று நடைபெறவுள்ளது.

>>>>>><<<<<<

பங்களாதேஷில் வன்முறைச் சம்பவங்கள் நீடிப்பதால், அந்நாட்டிற்கு பயணம் செய்வதை இந்தியர்கள் தவிர்க்க வேண்டும் என்று வெளியுறவு அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

தற்போது பங்களாதேஷில் வசிக்கும் இந்தியர்கள் வெளியில் செல்வதை குறைத்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அவசர உதவி தேவைப்படுவோர் டாக்காவில் உள்ள இந்திய தூதரக அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதற்கான தொலைபேசி எண்களை வெளியுறவுத்துறை தனது சமூகவலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

>>>>>><<<<<<

ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிய அரசியல் சாசனத்தின் 370வது பிரிவு நீக்கப்பட்டு ஐந்தாண்டுகள் நிறைவடைவதை ஒட்டி இன்று அங்கு பலத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஸ்ரீநகர், அக்னூர் எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டுப் பகுதி உட்பட பல்வேறு பகுதிகளில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், வாகனங்கள் சோதனையிடப்பட்டு வருவதாகவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

ஜம்மு காஷ்மீர் காவல்துறையினருடன், துணை ராணுவப் படையினரும் கூட்டாக ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

>>>>>><<<<<<

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியை நினைவுகூரும் வகையில், புதிய தபால்தலையை இந்திய அஞ்சல்துறை இன்று வெளியிடுகிறது.

தில்லியில் இன்று நடைபெறவுள்ள நிகழ்ச்சியில்., மத்திய தகவல் தொடர்பு துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா புதிய தபால்தலையை வெளியிட, அதனை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா பெற்றுக் கொள்கிறார்.

>>>>>><<<<<<

அத்திக்கடவு - அவினாசி திட்டத்திற்கு நிலம் வழங்கிய விவசாயிகளுக்கு திட்டம் தொடங்கப்படுவதற்கு முன்பாக இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு. முத்துசாமி தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தண்ணீர் பற்றாக்குறையே திட்டத்தின் தாமதத்திற்கு காரணம் என்று கூறினார்.

இத்திட்டத்தின் கீழ், பவானி ஆற்றிலிருந்து 1 புள்ளி ஐந்து டிஎம்சி தண்ணீர் ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள ஆயிரத்து 45 குளங்களுக்கு நீரேற்றம் செய்யப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

கூடுதலாக குளங்களை சேர்ப்பதற்கு தனித்திட்டம் வகுக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

>>>>>><<<<<<

உலகப்புகழ் பெற்ற தூத்துக்குடி பனிமய மாதா பேராலய தேரோட்டம் இன்று மாலை நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் கலந்து கொள்வதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் தூத்துக்குடியில் குவிந்துள்ளதால் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நேற்றிரவு நடைபெற்ற கூட்டு திருப்பலி நிகழ்ச்சியில், தூத்துக்குடி மட்டுமல்லாமல், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பனிமய மாதா பேராலய திருவிழாவை முன்னிட்டு, தூத்துக்குடி மாவட்டத்திற்கு இன்று உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

காஸாவில் பள்ளி ஒன்றின் மீது இஸ்ரேல் விமானப்படை நடத்திய தாக்குதலில் 25 பேர் உயிரிழந்தனர்.

இஸ்ரேல் விமானப்படைகள் நேற்று இரண்டு பள்ளிகள் மீது குண்டுகளை வீசியதாகவும், இதில் 12க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்று பாலஸ்தீன உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

ஆனால், ஹமாஸ் அமைப்பின் தளங்கள் மீது தான் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் ராணுவ செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இதுவரை, காஸா திட்டுப் பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 39 ஆயிரத்து 583ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், காஸாவில் பள்ளி மீது இஸ்ரேல் விமானப்படை நடத்திய தாக்குதலுக்கு ஈரான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அப்பாவி மக்கள் மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதாக ஈரான் வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் திரு. **Nasser Kanaan** கூறியுள்ளார்.

**>>>>>><<<<<<**

தில்லி, உத்ராகண்ட், ஜம்மு காஷ்மீரில் இன்று பலத்த மழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஹிமாச்சலப்பிரதேசத்தில் அடுத்த 5 நாட்களுக்கு மழை நீடிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பீகார் மாநிலத்திலும் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது.

மத்தியப்பிதேசம், குஜராத் மகாராஷ்ட்ரா மாநிலங்களில் ஒரு சில இடங்களில் கனமழை முதல் அதிகனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் குஜராத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களை தேசிய பேரிடர் மீட்புப் படையினர் நேற்றிரவு மீட்டனர்.

இந்நிலையில், மேற்குதிசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தமிழகத்தின் ஒரு சில பகுதிகளிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமானது வரையிலான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கோவை மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, கடலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய எட்டு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமானது வரையிலான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

பாரிஸ் ஒலிம்பிக் மகளிர் மல்யுத்தப் போட்டியின் 68 கிலோ எடைப்பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் **Nisha Dahia** பங்கேற்கிறார்.

இன்று நடைபெறவுள்ள பேட்மிண்டன் போட்டியின் வெண்கலப் பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியாவின் லக்ஷ்யா சென் இன்று மலேசியாவின் **Lee Zii Jia**–வை எதிர்கொள்கிறார்.

மகளிர் டேபிள் டென்னிஸ் காலிறுதிக்கு முந்தைய சுற்று குழுப் போட்டியில், இந்தியா – ருமேனியாவை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை 32 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், முதலில் விளையாடிய இலங்கை நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 240 ரன் எடுத்தது.

வாஷிங்டன் சுந்தர் 3 விக்கெட்டையும், குல்தீப் யாதவ் 2 விக்கெட்டையும், முஹமது சிராஜ், அக்சர் பட்டேல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

241 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய இந்தியா, 42 புள்ளி 2 ஓவரில் 208 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

**Jeffery Vandersay** 6 விக்கெட்டையும், **Charith Asalanka** 3 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

>>>>>><<<<<<

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், திண்டுக்கல் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் கோவை அணியை வென்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

சென்னையில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில், முதலில் விளையாடிய கோவை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 129 ரன் எடுத்தது.

130 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய திண்டுக்கல் அணி 18 புள்ளி இரண்டு ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 131 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

>>>>>><<<<<<

மன்னார்குடியில் நேற்று நடைபெற்ற மாநில அளவிலான பள்ளி மாணவர்களுக்கான ஹாக்கிப் போட்டியில், திருச்சி விளையாட்டு விடுதி அணி கோப்பையை வென்றது.

>>>>>>END<<<<<<